பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 01 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கை, சீரான வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

**2.** நாட்டின் விண்வெளிப் பொருளாதாரம் **8** புள்ளி **4** பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளதாக மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

**3.** தமிழக அரசு சார்பில் **2016**ஆம் ஆண்டு முதல் **2022**ஆம் ஆண்டு வரையிலான சிறந்த திரைப்படங்களுக்கான விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**4.** தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க மாநில அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

**5.** **Track** ஆசியக் கோப்பை சைக்ளிங் போட்டி சென்னையில் தொடங்கியது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொருளாதாக ஆய்வறிக்கை, சீரான வளர்ச்சியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தொடர் சீர்திருத்தங்களின் விளைவாக இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய சவால்களுக்கு இடையிலும் இந்தியா நிலைத்தன்மையுடன் முன்னேறி வருவதாக அவர் கூறியுள்ளார்.

நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பொருளாதார சீர்திருத்தங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை அதிகரித்துள்ளதாகவும், முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொழில்துறை வளர்ச்சி, திறன்மேம்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றில் அரசு உறுதியுடன் தொடர்ந்து செயல்படும் என்று திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<>>>>

மதுரை விமான நிலையத்தை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

மக்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், இந்த விமான நிலையத்தில் 24 மணி நேர சேவைக்கான கோரிக்கை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த விமான சேவைகளை அதிகரிக்க விமானப் போக்குவரத்து நிறுவனங்களுடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<>>>>

நாட்டின் விண்வெளிப் பொருளாதாரம் 8 புள்ளி 4 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சி அடைந்துள்ளதாக மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் இது தொடர்பான கேள்விக்கு பதிலளித்துப் பேசிய அவர், விண்வெளித்துறையில் தற்போது நாட்டில் 399 புத்தொழில் நிறுவனங்கள் செயல்படுவதாக கூறினார்.

இத்துறையில் தனியார்துறை பங்கேற்புக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மிகப்பெரிய வாய்ப்புகளை உருவாக்கும் என்று அவர் கூறினார்.

இஸ்ரோ இதுவரை **434** வெளிநாட்டு செயற்கைக்கோள்களை செலுத்தியுள்ளதாகவும், இதில் **399** செயற்கைக்கோள்கள் **2014**ஆம் ஆண்டுக்குப் பின்னர் செலுத்தப்பட்டவை என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் **323** மில்லியன் யூரோ மற்றும் **233** மில்லியன் டாலர் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அடுத்த **10** ஆண்டுகளில் நாட்டின் விண்வெளிப் பொருளாதாரம் **45** பில்லியன் டாலரை எட்டும் என்று திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<>>>>

கம்பர் தொடர்பான தீவிர ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

மக்கள் மாளிகையில் நடைபெற்ற மாநில அளவிலான கம்பர் விருது வழங்கும் விழாவில் பேசிய ஆளுநர், ஸ்ரீராமரின் வாழ்வையும் லட்சியங்களையும் கம்பர் தமிழில் மொழிபெயர்த்து, அவற்றை எளிதில் புரிந்துகொள்ளக்கூடியவையாக மாற்றியதாக கூறினார்.

இது இந்தியாவின் ஒற்றுமை உணர்வுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.

சில அரசியல் சக்திகளால் கம்பரின் மரபு திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டதாகவும் அதை மீட்டெடுக்க வேண்டும் என்றும் திரு ஆர். என். ரவி தெரிவித்தார்.

முன்னதாக மக்கள் மாளிகையில் கம்பரின் திருவுருவச் சிலையை ஆளுநர் திறந்து வைத்தார்.

<<<<>>>>

தமிழக அரசு சார்பில் 2016ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறந்த திரைப்படம், சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த இயக்குநர் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இந்த 7 ஆண்டுகளுக்கு விருதுகளை மாநில அரசு அறிவித்துள்ளது.

இதேபோல் சின்னத்திரை தொடர் மற்றும் அதில் நடித்த கலைஞர்களுக்கான விருதுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த விருதுகள் பிப்ரவரி 13ஆம் தேதி சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க மாநில அரசு விரைந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை நந்தனம் அரசுக் கலைக்கல்லூரி வளாகத்திலேயே பெண் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக சமூக வலைதளத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் நாள்தோறும் பாலியல் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் இதனைத் தடுக்க மாநில அரசு நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

சென்னையில் பீகாரைச் சேர்ந்த இளம்பெண் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து இச்சம்பவமும் நடைபெற்றுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

திமுக ஆட்சியில் தமிழகம் பெண்களுக்குப் பாதுகாப்பில்லாத மாநிலமாக மாறியுள்ளதாக திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

<<<<>>>>

ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், திருப்பூர், கோவை பகுதிகளில் பின்னலாடைத் தொழில்துறைக்கு பெரிதும் பயன் அளிக்கும் என்று பிஜேபி மகளிர் அணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் கூறியுள்ளார்.

கோவை மாவட்டம் காரமடையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தொழில் துறையினரின் கோரிக்கைகளை நிறைவேற்ற மத்திய அரசு உரிய நடவடிக்கைள் எடுகத்துள்ளது என்றார்.

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக அவர் கூறினார்.

ஆனால் பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலம் தமிழ்நாடு என வெற்று விளம்பரங்களை மாநில அரசு மேற்கொள்ளவதாக திருமதி வானதி சீனிவாசன் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டத்தில் நேற்று இரவு லேசான நில அதிர்வு உணரப்பட்டது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேரந்த மக்கள் இந்த அதிர்வை உணர்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் - 49 செகண்ட்ஸ்)**

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி பகுதியிலும் சில இடங்களில் லேசான நில அதிர்வு உணரப்பட்டதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

<<<<>>>>

தமிழகத்தில் வறண்ட வானிலை நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் அதிகாலை நேரங்களில் அதிக பனிமூட்டம் நிலவும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பிரிட்டன் பிரதமர் திரு. கெய்ர் ஸ்டார்மர், பீஜிங்கில் சீன அதிபர் திரு. ஜீ ஜிம்பிங்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

-------------

தேசப்பிதா மகாத்மா காந்தி நினைவு தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெறும் சர்வமத பிரார்த்தனையில் மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங் மற்றும் திரு மனோகர் லால் பங்கேற்கின்றனர்.

-------------

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, இன்று அசாமில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

-------------

மைபாரத் தளத்தில் நாடு முழுவதும் 2 கோடி இளைஞர்கள் தன்னார்வலர்களாகப் பதிவு செய்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

-------------

கோவிட் பாதிப்புக்குப் பின்னர் இந்தியாவுக்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

-------------

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று ஆளுநர் திரு. ஆர்.என். ரவி பங்கேற்று மாணவர்களுக்கு பட்டங்களை வழங்குகிறார்.

-------------

நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட தாமரைக்குளத்தில் பொழுதுபோக்கிற்கான படகு சவாரியை மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

-------------

நீலகிரி மாவட்டத்தில் சாலை விதிகளை மீறியது தொடர்பாக கடந்த ஆண்டில் 12 கோடி ரூபாய் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டதாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா தெரிவித்துள்ளார்.

-------------

கள்ளக்குறிச்சியில் சுற்றுச்சூழல் கல்வி திட்டத்தின் கீழ் பள்ளி மாணவர்களுக்கான இயற்கை முகாமை மாவட்ட ஆட்சியர் திரு. எம். எஸ். பிரசாந்த் தொடங்கி வைத்தார்.

-------------

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆட்சியர் திரு. சதீஷ் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

சென்னை ஆலந்தூரில் மாநகராட்சியின் புதிய மண்டல அலுவலக கட்டடத்திற்கான பணிகளுக்கு மாநில அமைச்சர்கள் திரு கே.என். நேரு மற்றும் திரு. தா.மோ அன்பரசன் அடிக்கல் நாட்டினர்.

-------------

சென்னை மாநகராட்சி சார்பில் நடத்தப்பட்ட பெருங்கடல் பாதுகாப்பு தொடர்பான பயிலரங்கில், பள்ளி மாணவர்கள் **200**-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

-------------

*<u>விளையாட்டுச் செய்தி</u>*

**Track** ஆசியக் கோப்பை சைக்ளிங் போட்டி சென்னையில் தொடங்கியது.

சென்னையை அடுத்த மேலக்கோட்டையூரில் இப்போட்டியை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.

ஆசிய சைக்ளிங் கூட்டமைப்பு, இந்திய சைக்ளிங் கூட்டமைப்பு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஆகியவை இணைந்து இப்போட்டியை நடத்துகின்றன.

நாளை வரை நடைபெற உள்ள இப்போட்டியில் 11 நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

**<<<<The End>>>>**